அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு 2024

# தமிழ் - ஆண்டு 12

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

முற்காலத்தில் மாந்தர் கூட்டங் கூட்டமாக அலைந்து திரிந்து கொண்டிருந்தபோது மொழியானது குறுகிய எல்லைக்குட்பட்டதாகவே இருந்திருக்க வேண்டும். பொருள்களும் அவற்றைக் கையாளும் மாந்தர்களும் எதிரே இருக்கும்போது வாழ்வுக்கான வினை செய்வதைப் பற்றிய வினைச்சொற்களே முதலில் தோன்றியிருக்கக்கூடும். வாழ்வை நடத்தவேண்டிய செய்கைகளைத் தூண்டுபவையாகவும் பட்டறிவை மற்றவருக்கு எடுத்துரைப்பதாகவும் இருந்திருக்கும். இது மாந்தனது மொழியறிவுப் பெருக்கத்தின் தோற்றுவாய் என்றே கூறலாம். மற்றொரு மாந்த சக்தியின் விழிப்பாக, வாழ்க்கையை வாழ்வதற்குப் பயன்படும் பொறிகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பயன்படுத்தும் செய்கைகளில் ஈடுபடத் தொடங்கியது.

அறிவுக்குத் துணையாக உணர்ச்சி இயங்கியபோது தான் நாட்டுப்புறப் பாடல்கள், கூத்து போன்றன தோன்றலாயின. காட்டிலும் வயலிலும் மலையிலும் கடற்கரைப் பகுதியிலும் வசிப்பவர்கள் வேலைகளைச் செய்யும்போது களைப்பைப் போக்கும் பொருட்டு உணர்ச்சியை நாடினர். இந்த உணர்ச்சியறிவு வளர்ச்சியின் தொடர்ச்சியாகவே கலைகளும் இசைக்கருவிகளும் இயற்கையுடனும் தொழில்நுட்பத்துடனும் இசைந்து செல்கின்றன. காலம் மாந்த வளர்ச்சிப் போக்கில் பல வாழ்வியல் முறைகளையும் பன்மொழி அறிமுகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.